
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1253

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

71

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்




## வலுவற்ற வாதங்கள் நியாயம்தானா?

**தூ**த்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த நாராயணன் - கோமதியம்மாள் தம்பதியின் மகன் பரமசிவம், *2015*-ஆம் ஆண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவினார். பரமசிவம் தனது பெயரை, சமீர் அகமது என மாற்றிக்கொண்டதாக, ‘சுன்னத் ஜமாத் அமைப்பு’ சான்றிதழில் குறிப்பிட்டுள்ளது.

இவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். ‘லெப்பை’ சமூக நடைமுறையை இவர் பின்பற்றுவதால், அதற்குரிய சான்றிதழைத் தன் குழந்தைகளுக்கு வழங்கக்கோரி கயத்தார் வட்டாட்சியருக்கு விண்ணப்பித்துள்ளார். ஆனால், *2020*-ஆம் ஆண்டு அந்த வட்டாட்சியர் இவருடைய விண்ணப்பத்தை நிராகரித்து விட்டார். இதையடுத்து, *2022*-ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தொடர்ந்தார் சமீர் அகமது. அந்த வழக்கில், *2026* ஜூன் *25*-ஆம் தேதி தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பி.பி. பாலாஜி அமர்வு, அவரது கோரிக்கையை நிராகரித்துள்ளனர். அத்துடன் *9.03.2024* அன்று ‘திராவிட மாடல் அரசு’ வெளியிட்ட அரசாணையையும் ரத்துசெய்திருக்கிறது உயர் நீதிமன்ற மதுரைக் கிளை.

அந்த அரசாணையில், ‘தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் சட்டம் - *2007* என்பது கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு மற்றும் மாநிலத்தின்கீழ் உள்ள பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளுக்கு *3.5* சதவிகித இடஒதுக்கீடு வழங்குவதை உறுதிசெய்கிறது. அதன்படி, தமிழ்நாடு சட்டம் *45/1994*, பிரிவு *3 (A)*-படி சில பிரிவினரைப் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் என அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டது. இதில், ஏழு பிரிவினர் குறித்து தெரிவிக்கப் பட்டுள்ளது. ‘அன்சார்’, ‘தெக்கானி’, ‘துதேகுலா’, ‘லெப்பைகள்’ (‘ராவுத்தர்’ மற்றும் ‘மரைக்காயர்’ உள்பட - பேச்சுமொழி தமிழ் அல்லது உருது என இருந்தாலும்), ‘மாப்பிள்ளா’, ‘ஷேக்’, ‘சையத்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரும்பி இஸ்லாமியராக மாறுவோரை, இந்த ஏழு பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் இணைத்துக்கொள்வது ஜமாத் நிர்வாகத்தின் பொறுப்பு. ஒரு சான்றிதழை, ஜமாத் வழங்கிய பிறகு, அதனை வருவாய்த் துறை அதிகாரிகள் கேள்விக்குள்ளாக்குவதோ, மறு ஆய்வு செய்வதோ நியாயமற்றது. ஆனால், சமீர் அகமது விவகாரத்தில் வருவாய்த் துறை அதிகாரியும், உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதிகளும் அதைச் செய்திருக்கிறார்கள். அத்துடன் ‘திராவிட மாடல் அரசு’ வெளியிட்ட அரசாணையையும் ரத்துசெய்திருக்கிறது உயர் நீதிமன்ற மதுரைக் கிளை.

ஆளுங்கட்சியான த.வெ.க.வின் வலுவற்ற வாதங்கள்தான் இன்று இத்தகைய தீர்ப்பைத் தந்திருக்கிறது. இது நியாயம்தானா என்று கண்டித்துக் குரல் எழுப்பியிருக்கிறது எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம். ‘அரசியலமைப்புச் சட்டத்தின் *ARTICLE-25*’ ஒரு குடிமகன், தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றவும், பரப்பவும் முழு சுதந்திரம் அளிக்கிறது. ஆனால் அதே சமயம், மதம் மாறுவதால் ஒருவரின் ஆன்மிக நம்பிக்கை மாறலாம்; ஆனால், அவர் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வந்த சமூகப் புறக்கணிப்பும் கல்விப் பின்னடைவும் ஒரு நாளில் மறைந்துவிடாது எனும் அடிப்படை உண்மையை, நீதிமன்றம் உணர்ந்திருக்க வேண்டும்’ என்ற அறக்குரலை உரத்து முழங்கியிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

> **சி.ஏ.ஏ. போல, வக்ஃபு வாரிய பிரச்சினை போல, காஷ்மீர் சிக்கல்கள் போல ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதற்கும் போராடும் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மட்டும் உறுதி.**

‘சமூக நீதி வரலாற்றில் சறுக்கலை ஏற்படுத்தியிருக்கிறோம்’ என்ற கூச்சம் த.வெ.க.வுக்கு இல்லை. மேல்முறையீடு செய்து இழந்த நீதியை மீட்டெடுப்போம் என்ற உறுதிப்பாடும் அவர்களிடத்தில் இல்லை. ஆனால், இவ்விவகாரத்திலும் போராட்டத்தைத் தொடர துணிந்துவிட்டது தி.மு.கழகம்.

### கலைஞர் வழி

*1999*-ஆம் ஆண்டு, உலகத் தமிழ் இஸ்லாமிய இலக்கிய ஆறாவது மாநாட்டில், வலம்புரி ஜான் எழுதிய இரண்டு நூல்கள் வெளியிடப் பட்டன. அதில் ஒரு நூலில், “ஒரு இந்து முஸ்லிம் ஆகலாம், ஒரு முஸ்லிம் கிறிஸ்துவர் ஆகலாம். ஆனால், ஒரு செட்டியார் முதலியார் ஆக முடியாது. ஒரு பிள்ளைவாள் பிராமணர் ஆகவே முடியாது. மதங்களை மாற்றிக்கொள்ளுகிற மனிதர்களால் சாதிகளை ஏன் மாற்றிக்கொள்ள முடியவில்லை?” என்று குறிப்பிடப்பட்டிருந்தார். அதைச் சுட்டிக்காட்டிய கலைஞர், பல மேடைகளில் நான் சொல்வது இந்தக் கருத்து என்று அதை வரவேற்று, தானும் முன்மொழிந்தார்.

இன்றைய தீர்ப்புக்கும் இந்தக் கருத்துக்கும் நுணுக்கமான அரசியல் நேர்க்கோடு இருக்கிறது. ஏனெனில், ஒரு முஸ்லிம் இந்து மதத்தைத் தழுவ விரும்பினால், அவரை எந்தச் சாதியில் சேர்க்க முடியும்? ‘வாய்ப்பில்லை’ என்ற நிலைதான் இருக்கிறது. எனவே, மதம் மாறினால் உனக்கு இடஒதுக்கீடு கிடையாது என்று விடுக்கப்படும் மறைமுக எச்சரிக்கை இது. எந்த மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டுமென்பது தனி மனிதனின் சுதந்திரத்துக்கு உட்பட்டது. யாரும் வலிந்து ஒருவரை மாற்ற முடியாது, மாற்றவும் கூடாது. ஆனால், தன் சாதி அடையாளத்தை இழக்க வேண்டுமென்று ஒருவர் மாறினால், உனக்கு இடஒதுக்கீடு கிடையாது என மிரட்டுவதற்கு ஒப்பானது இத்தீர்ப்பு.

இதையெல்லாம் நன்கு உணர்ந்தவர் கலைஞர் என்பதால்தான், இஸ்லாமியர்களுக்கான தனி இடஒதுக்கீட்டை உருவாக்கும்போது, ஏழு வகையான இஸ்லாமியர்களையும் மிகத்தெளிவாக அதில் இணைத்தார். புதிதாக மதம் மாறுவோரை இந்தப் பட்டியலுக்குள் ஒன்றில் இணைத்து பிற்காலத்திலும் இடஒதுக்கீட்டை பாதிக்காத வண்ணம் ஏற்பாடுகளை செய்துவைத்தார். அதற்கான நியாயமான காரணங்களை ஆணையம் மூலம் பெற்றார். அதற்குரிய அரசாணையை வெளியிட்டு, *2024*-இல் சட்டப்பூர்வ தெளிவையும் திராவிட மாடல் அரசு தந்தது.

ஆனால், அரசாணையை ஏற்க மறுதலிப்பது முந்தைய தீர்ப்புகளுக்கும் முரணானது. இதுதொடர்பாக, *1951*-ஆம் ஆண்டில் ஜி.மைக்கேல் எதிர் எஸ்.வெங்கடேஸ்வரன் வழக்கில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் பி.வி.ராஜமன்னார் மற்றும் டி.எல்.வெங்கடராம ஐயர் வழங்கிய தீர்ப்பை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை மேற்கோள் காட்டியுள்ளது. ‘ஓர் இந்து இஸ்லாம் மதத்துக்கு மாறும்போது, அவர் வெறும் முஸ்லிமாக மட்டுமே கருதப்படுகிறார். மதம் மாறுவதற்கு முன்பு அவர் சார்ந்திருந்த சாதி, இஸ்லாம் சமூகத்தில் அவரது இடத்தைத் தீர்மானிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது உட்பிரிவைச் சேர்ந்த ஒருவர் இஸ்லாம் மதத்துக்கு மாறும்போது, அவர் எந்தவொரு சாதியையும் சாராதவராகவே உள்ளார்’ என்கிறது அத்தீர்ப்பு.

இதையெல்லாம் நுட்பமாக உணரக்கூடிய ஆற்றலோ, அறிவோ, அனுபவமோ இன்றைய ஆட்சியாளர்களுக்கு இல்லை. அதுகுறித்து, அவர்கள் சிந்திக்கவும்போவதில்லை. சி.ஏ.ஏ. போல, வக்ஃபு வாரிய பிரச்சினை போல, காஷ்மீர் சிக்கல்கள் போல ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதற்கும் போராடும் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மட்டும் உறுதி.

...நீளும்

## எல்லாமே மார்க்கெட்டிங்தான்!

**த**மிழ்நாட்டின் அரசியல், விளம்பர நிறுவன கட்சியிடம் சிக்கிக் கொண்டதாக ஒப்பிட்டு முகநூலில் பதிவிட்டுள்ளார், பத்திரிகையாளர் தெ.சு.கவுதமன். அவரது பதிவிலிருந்து...

“உணவுப்பொருள் சார்ந்த புராடக்ட் மார்க்கெட்டிங்கில் இருவகை விளம்பரங்களைப் பார்க்கலாம். ‘மணல் மணலா சுவையான பசு நெய்’ என்பார்கள்... ‘உடல் ஆரோக்கியத்துக்கான ஊட்டச்சத்து’ என்பார்கள்... இதெல்லாம் விற்பனைக்கான பொருளின் தரத்தை முன்வைத்து செய்யப்படும் விளம்பரங்கள். அதே வேளை, பொருளின் தரத்தையெல்லாம் சொல்ல இயலாது. ஆனால் விளம்பரப்படுத்தணும் எனும்போது, வேறொரு நல்ல விஷயத்தோடு மறைமுகமாக அந்தப் பொருளை முன்னிறுத்துவார்கள். கோக் விளம்பரங்கள் அனைத்திலும் அதன் பெருமையைப் பேச மாட்டார்கள். ஆனால் மகிழ்ச்சி என்பதை முன்வைத்து, மகிழ்ச்சியான தருணம் என்றாலே அங்கே கோக் இருக்கும் என மனதில் பதியவைத்து, எந்த பார்ட்டி என்றாலும் ‘கோக்கோடு கொண்டாடுங்கள்’ என விளம்பரப்படுத்துவார்கள்!

இதேபோல்தான் ‘டெய்ரி மில்க்’ விளம்பரத்திலும் ‘ஸ்வீட் எடு கொண்டாடு’ என, எந்த ஒரு கொண்டாட்டம் என்றாலும் டெய்ரி மில்க் வாங்கிக்கொடுக்கணும் என நம் மனதில் பதிய வைப்பார்கள்!

இதையெல்லாம் ஏன் சொல்றேன்னா, விஜய்யின் த.வெ.க. மார்க்கெட்டிங் உத்தி பற்றி நண்பர் ஒருவர் விசாரித்தபோது, இந்த உதாரணங்களைச் சொல்லி, த.வெ.க. என்றாலே கொண்டாட்டம் என்ற மனநிலையை ‘ரூட் மாஃபியா குரூப்’ உருவாக்கியிருப்பதை விவரித்தேன். முன்பெல்லாம் தியேட்டரில் முன்னணி மாஸ் ஹீரோ படத்தின் ரிலீஸ் என்றால், ரசிகர்களே முன்னின்று கொண்டாடுவார்கள். ஆனால், ரூட் மாஃபியா அந்தச் சூழலை மாற்றி, அவர்களே பட ரிலீஸின்போது, ஆட்டம் பாட்டத்துக்கு தியேட்டர் வாசலில் பெய்டு ரசிகர்களை உருவாக்கி, டான்ஸ், மேளம் என அமர்க்களப்படுத்துவார்கள். அதேபோல், ஃபர்ஸ்ட் ஷோ ரிவ்யூவுக்கும் பெய்டு ஆட்கள்தான். இப்படித்தான் டப்பா படத்தையும் பரபரப்பாக்குவார்கள்!

இதேபோல்தான் த.வெ.க. மீட்டிங் என்றாலே ‘சியர் லீடர்ஸ்’ போல பெண்களை, இளைஞர்களை த.வெ.க. கொடியோடு ஆடவிடுவது. உற்சாகமாகக் கத்தவிடுவது எனச் செய்து, விஜய் மீட்டிங் என்றாலே நடிகரைக் காண வரும் திருவிழா போல உருவாக்கிவிட்டார்கள்! அதோடு, உருட்டு உருட்டாகப் பேட்டியளிப்பது, கண்ணீர் சிந்துவது என அத்தனையும் நடிப்பாகச் செய்து, அதைச் சுற்றியுள்ள கூட்டமும் நம்பி, மதிமயங்கிப் பின்பற்ற, இந்தக் கொண்டாட்டம்தான் வாக்களிக்கும் நாள் வரை நடந்தது!

இப்போது, விஜயபாஸ்கர் இணைப்பு விழாவில்கூட ஆங்காங்கே பெண்கள் டான்ஸ் ஆடியதும் இதே வேலைதான்! ஆக, இங்கே கட்சியின் தரம், கொள்கை குறித்தெல்லாம் தேவையில்லை. ஒரே மகிழ்ச்சி... கொண்டாட்டம்தான்! இப்படித்தான் மூளைச்சலவை செய்யப்பட்டு, அதையே தொடர்கிறார்கள். எல்லாமே மார்க்கெட்டிங்தான்!’ என்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



வே.பா.பிரபாகரன்



### முத்தமிழறிஞரிடம் வாழ்த்து!

2015-ஆம் ஆண்டு, எனது 25-வது திருமண நாளை முன்னிட்டு, கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் குடும்பத்துடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம் என்னால் என்றும் மறக்க முடியாதது.

**- சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன்,**
**தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்,**
**59(அ) வட்டக் கழகச் செயலாளர், துறைமுகம் மேற்குப் பகுதி,**
**சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அமெரிக்காவில் அண்ணா!

13.04.1968 அன்று அமெரிக்காவின் அழைப்பின் பேரில், அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டார் அண்ணா. வழியில், ரோம் நகருக்குச் சென்று போப்பையும் பாரிஸில் மால்கம் ஆதிசேஷய்யாவையும் சந்தித்துவிட்டு, பின்னர் நியூயார்க் சென்றார். 19.04.1968 அன்று அமெரிக்காவின் கென்னடி விமான நிலையத்தில், தரையிறங்கிய அண்ணாவை இந்தியத் தூதர் ஜி.பார்த்தசாரதி, உயர் அதிகாரிகள் மற்றும் எண்ணற்ற தமிழர்கள் திரண்டு வரவேற்றனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900